**Office of Superintendent of Public Instruction (OSPI)**
**வீட்டு மொழிக் கருத்துகணிப்பு (Home Language Survey)**

| | | |
|---|---|---|
| **மாணவர் பெயர்:** | | **தேதி:** |
| **பிறந்த தேதி:** | **பாலினம்:** | **தேர்ச்சிநிலை:** |

**படிவத்தைப் பூர்த்தி செய்தவர்:**

பெற்றோர்/பாதுகாவலர் பெயர்____________________ மாணவருக்கான உறவுமுறை__________

பெற்றோர்/பாதுகாவலர் கையொப்பம் ____________________________

இவ்வசதி கிடைக்கிற பட்சத்தில், பாடசாலையிலிருந்து நீங்கள் எந்த மொழியில் தகவல் தொடர்பைப் பெற்றுக் கொள்ள விரும்புவீர்கள்?

________________________________________

**உங்கள் குழந்தை முன்னர் கல்வி பயின்ற பாடசாலையில், இடைநிலை இருமொழி கற்பித்தல் திட்டத்தின் வாயிலாக, ஆங்கில மொழி மேம்பாட்டு ஆதரவை உங்கள் குழந்தை பெற்றாரா?** ஆம்__ இல்லை__ தெரியாது__

| | |
|---|---|
| 1. உங்கள் குழந்தை எந்த நாட்டில் பிறந்தார்? | __________ |
| 2. **உங்கள் குழந்தை எந்த மொழியை முதலில் பேசக் கற்றுக் கொண்டார்**?* | __________ |
| 3. **வீட்டில், <u>உங்கள் குழந்தை</u> எந்த மொழியை மிக அதிகமாகப் பயன்படுத்துகிறார்**?* | __________ |
| 4. உங்கள் குழந்தையோடு நீங்கள் பேசும் போது, எந்த மொழியை (மொழிகளை) <u>பெற்றோர்/பாதுகாவலர்கள்</u> மிக அதிகமாகப் பயன்படுத்துகிறார்கள்? | __________<br>__________ |
| 5. அமெரிக்க ஐக்கிய நாடுகளுக்கு வெளியே, உங்கள் குழந்தை எப்போதாவது முறைப்படியான கல்வியைப்* பெற்றிருக்கிறாரா? (மழலையர் பள்ளி - 12 ஆம் வகுப்பு வரை)<br>____ஆம் ____இல்லை<br>"முறைப்படியான கல்வி" என்பதில், குழந்தைகளுக்கான அகதி முகாம்கள் அல்லது மற்ற சான்று பெறாத திட்டங்கள் அடங்குவதில்லை. | ஆம் என்றால், எந்த மொழியில் (மொழிகளில்) பாடம் கற்பிக்கப்பட்டது?<br>__________<br>எத்தனை மாதங்களுக்கு? ____ |
| 6. அமெரிக்காவில் உங்கள் குழந்தை முதன்முதலாக பள்ளிக்கு எப்போது சென்றார்? (மழலையர்பள்ளி - 12வது வகுப்பு) | __________<br>மாதம் நாள் ஆண்டு |

*டபிள்யூஏசி **392-160-005**: "முதன்மை மொழி" என்பதற்கு, ஒரு மாணவர் வசிக்கும் இடத்தில், அவர் தகவல் தொடர்பு கொள்வதற்காக மிகவும் அதிகமாக உபயோகிக்கிற மொழி (அது பெற்றோர், பாதுகாவலர், அல்லது மற்றவர்கள் உபயோகிக்கும் மொழியாக இருக்க வேண்டிய அவசியமில்லை) என்றே அர்த்தமாகிறது.

*Note to district: A response of a language other than English to question #2 OR question #3 triggers ELL placement testing.*

## இந்த வீட்டு மொழிக் கருத்து கணிப்பின் நோக்கம்

வாஷிங்டன் பாடசாலைகளில் சேர்ந்து கொள்கிற ***அனைத்து*** மாணவர்களிடமும் இந்த வீட்டு மொழிக் கருத்து கணிப்பு நடத்தப்படுகிறது. பின்வரும் தகவல்கள், இந்தப் படிவம் குறித்து உங்களுக்குள்ள சில கேள்விகளுக்குப் பதிலளிக்க உங்களுக்கு உதவும்.

**இந்த வீட்டு மொழிக் கருத்து கணிப்பின் நோக்கம் என்ன?**

வீட்டு மொழிக் கருத்து கணிப்பின் முதன்மையான நோக்கமே, வகுப்பறைகளில் வெற்றியடைவதற்குத் தேவையான ஆங்கில மொழித் திறமைகளை வளர்த்துக் கொள்ள உதவுவதற்கான ஆதரவிற்குத் தகுதியடைகிற மாணவர்களையும், மற்ற சேவைகளுக்குத் தகுதியடைகிற மாணவர்களையும் இனங்காண உதவுவதேயாகும். பாடசாலையில் வெற்றிகரமானவர்களாக இருப்பதற்கு மாணவர்களுக்குத் தேவைப்படுகிற சேவைகளுக்கு அவர்கள் தகுதியடைவதை, இந்தத் தகவல்கள் பாதித்துவிடக் கூடும் என்பதால், இவற்றை சரியாகப் பதிவு செய்வது முக்கியமானதாகும். கூடுதல் மொழி மற்றும் கல்வி ஆதரவுகள் தேவைப்படுகின்றனவா என்பதைத் தீர்மானிக்க, பரீட்சை வைப்பது அவசியமாகலாம். எந்தவொரு மாணவரும், இந்தப் படிவத்திற்கு அளிக்கும் பதில்களின் அடிப்படையில் மட்டுமே ஓர் ஆங்கில மொழி வளர்ச்சித் திட்டம் ஒன்றில் வைக்கப்பட்டுவிட மாட்டார்.

**நீங்கள் ஏன் மாணவர்களின் முதல் மொழி மற்றும் வீட்டில் உபயோகிக்கிற மொழி (மொழிகள்) குறித்துக் கேட்கிறீர்கள்?**

மாணவரின் மொழி குறித்த இரண்டு கேள்விகள், எங்களுக்குப் பின்வருபவற்றைத் தீர்மானித்துக் கொள்ள உதவுகின்றன:

- உங்கள் மாணவர் ஆங்கிலம் கற்றுக் கொள்வதில் உதவி பெறத் தகுதியடைகிறாரா, மேலும்
- வீட்டில் அம்மாணவர் உபயோகிக்கிற மற்ற மொழிகள் குறித்து, பாடசாலையில் உள்ள ஊழியர்கள் தெரிந்து வைத்துக் கொள்ள வேண்டுமா.

உங்கள் குழந்தை முதலில் கற்றுக் கொண்ட மொழி, உங்கள் குழந்தை வீட்டில் இப்போது தகவல் தொடர்பு கொள்வதற்காக் உபயோகிக்கிற மொழியிலிருந்து வித்தியாசமானதாக இருக்கலாம். இவ்விரு கேள்விகளுக்கான பதில்கள், அந்தந்த மாணவரின் தனிப்பட்ட தேவைகளுக்கு ஏற்றதாக உள்ள அறிவுறுத்தல்களை வழங்க பாடசாலைக்கு உதவி செய்து, எழக்கூடிய தகவல் தொடர்புத் தேவைகளுக்கும் உதவிபுரியும். ஆங்கிலம் தவிர்த்து வேறொரு மொழியை முதலில் கற்றுக் கொண்ட மாணவர்கள், கூடுதல் ஆதரவுகளுக்குத் தகுதியடையலாம். ஆங்கிலம் நன்றாகப் பேசுகிற மாணவர்களுக்கும் கூட, பாடசாலையில் வெற்றிகரமாக இருக்கத் தேவைப்படுகிற மொழித் திறமைகளை வளர்த்துக் கொள்வதில் ஆதரவு தேவைப்படலாம்.

**மாணவர் எங்கே பிறந்தார் என்பதை நீங்கள் ஏன் கேட்கிறீர்கள்?**

மத்திய நிதியுதவி பெறும் நோக்கங்களுக்கான குடிவரவு வரையறையை அம்மாணவர் சந்திக்கிறாரா என்பதை, மாவட்ட பாடசாலை அலுவலகமும், மாநிலப் பாடசாலை அலுவலகமும் தீர்மானித்துக் கொள்ள இத்தகவல் உதவிபுரிகிறது. இது, அம்மாணவரின் பெற்றோர் இருவருமே அமெரிக்கக் குடிமக்களாக இருந்தும், அம்மாணவர் ஐக்கிய அமெரிக்க நாடுகளுக்கு வெளியே பிறந்திருந்தாலும் பொருந்துகிறது. இப்படிவம் ஆவணப்படுத்தியிராத மாணவர்களை இனங்காண்பதற்கு உபயோகிக்கப்படுவதில்லை.

**எனது மாணவரின் முந்தைய கல்விநிலை குறித்து நீங்கள் ஏன் கேட்கிறீர்கள்?**

ஒரு மாணவரின் கல்வி குறித்த தகவல், அமெரிக்க ஐக்கிய நாடுகளுக்கு உள்ளேயும் வெளியேயுமான அம்மாணவரது கல்வி, திட்டங்கள் மற்றும் மாவட்டச் சேவைகளில் பங்கேற்பதற்கு செய்யப்படுகிற சிபாரிசுகள் எதிலும் பரிசீலிக்கப்படுகின்றன என்பதை உறுதி செய்ய உதவும். அம்மாணவரது கல்விப் பின்னணியும், அவரது முந்தைய கல்விப் பின்னணியத்தின் அடிப்படையில், மாநிலத் தரநிலைகளை நோக்கிய திசையில் போதுமான அளவு முன்னேற்றத்தை அம்மாணவர் காண்பிக்கிறாரா என்பதைத் தீர்மானிக்க உதவுவதற்கானதோர் முக்கியமான தகவலாகும்.

வீட்டு மொழிக் கருத்துகணிப்பில் தேவையான தகவல்களை வழங்கியமைக்கு நன்றி. இந்தப் படிவம் குறித்தோ அல்லது உங்கள் குழந்தையின் பாடசாலையில் கிடைக்கிற சேவைகள் குறித்தோ உங்களுக்கு மேற்கொண்டும் கேள்விகளிருந்தால், தயவுசெய்து மாவட்டப் பாடசாலைத் அலுவலகத்தைத் தொடர்பு கொள்ளுங்கள்.